මැතිවරණ කොමිෂන් සභාව
தேர்தல் ஆணைக்குழு
Election Commission
මැතිවරණ මහලේකම් කාර්යාලය, අංක.02 සරණ මාවත, රාජගිරිය, ශ්‍රී ලංකාව
தேர்தல்கள் செயலகம், இல 02 சரண மாவத்தை, இராஜகிரிய, இலங்கை
Elections Secretariat, No.02 Sarana Mawatha, Rajagiriya, Sri Lanka

මාධ්‍ය නිවේදනය
ஊடக அறிவித்தல்
MEDIA RELEASE

**ஊடக அறிவித்தல் இல : PE/2024/49** **2024.10.31**

# பாராளுமன்றத் தேர்தல் - 2024 நவம்பர் 14

1981 இல 1 பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 24(1) (ஆ) மற்றும் (ஈ) ஆகிய பிரிவுகளுக்கு அமைய, பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுகின்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சி ஒவ்வொன்றினது பெயர்களும் சுயேச்சைக் குழு ஒவ்வொன்றையும் வேறுபடுத்திக்காட்டும் இலக்கமும், அத்தகைய கட்சிக்கு அல்லது குழுவுக்கு குறித்தொதுக்கப்பட்ட சின்னமும், வாக்குச் சீட்டில் காணப்படும் தொடர் ஒழுங்கும், வேட்பாளர்களின் பெயர்களும், அத்தகைய வேட்பாளர்கள் ஒவ்வொருவருக்கும் குறித்தொதொதுக்கப்பட்டுள்ள விருப்பு எண்ணும், வாக்களிப்பு நிலையங்கள் அமைந்துள்ள இடமும் குறிப்பிடப்பட்ட இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் இலக்கம் 2405/50 மற்றும் 2024 ஒக்டோபர் மாதம் 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையும்,

பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் அந்தந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகளினால் மற்றும் சுயேச்சைக் குழுக்களினால் அரசியலமைப்பின் 99அ ஆம் உறுப்புரையின் கீழ் தேர்தல் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்ட, பாராளுமன்ற உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப்படுவதற்கு தகைமையுடைய ஆட்களின் நிரல் குறித்துரைக்கப்பட்டுள்ள, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் இலக்கம் 2405/51 மற்றும் 2024 ஒக்டோபர் மாதம் 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையும், தேர்தல் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

**சமன் ஸ்ரீ ரத்நாயக்க**
**தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்**